முருகப்பெருமான் துணை

**மகான் திருப்பாண் ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.11.2023**, புதன்கிழமை

1. ஆறுமுக அரங்கமகா ஞானியே
அண்ணலே மகா தவசியே
மாறுதலை கலியினில் செய்திட
மகா அவதாரம் புரிந்த தேசிகனே

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது தேள்திங்கள்
அறிவிக்க முன்னான்கோர் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 13 ம் நாள், 29.11.2023, புதன்கிழமை)

3. வாரமதில் திருப்பாண் ஆழ்வாரும்
வழங்குவேன் உலகநலம்பெற
சோரமில்லா ஞானவான்கள் தனை
சுத்தநெறி கொண்டு படைத்து

4. படைத்து அருளும் அரங்க ஞானி
பண்பான தயவு நெறியை
தடையற மக்கள் ஏற்றுவர
தருமத்தில் பொருளுதவி செய்துவர

5. செய்துவர தொடரும் கருமவினை
செய்வினை கோளிடர்களும்
அய்யமற அகன்று மேவி
ஆபத்து அல்லலில்லா வாழ்வாய்

6. வாழ்வாய் நிலைகள் தேறி
வடிவேலன் வழிபாட்டில் திளைத்து
ஊழ்போக்கி மறுமை வெல்லும்
உயர்நிலைகள் தானும் அடைந்து

7. அடைந்துமே ஞானவான் எனும்
ஆற்றல்பலம் கூடி இனிதே
இடரில்லா சக்தி சர்வபலமுடன்
எல்லா ஞானமும் கண்டுத் தேறுவர்

8. தேறவே அரங்கன் தேடுகின்ற
தேர்வு செய்த ஞானிகளாக
அறத்தின் வழியில் துணைநின்று
அரங்கன் அவதார நோக்கம்

9. நோக்கம் வெற்றி செய்யும்படி
நிலவுலகில் தொண்டாற்றி
ஆக்கமுடன் ஞானிகளாக
அகிலத்தை மாற்றும் வண்ணம்

10. வண்ணமுடன் உயர்சேவை வழி
வையகத்தை வளப்படுத்தி
எண்ணம் மேம்பாடு கண்ட
இணையிலா ஞானிகள் ஆட்சி

11. ஆட்சிதனை படைத்தருள்வர்
ஆக்கமுடன் சேவை கொண்டே
ஆட்சி மாற்றம் உலகில் நடத்துவர்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—